செ.வெ.எண்: 52 நாள்: 22.01.2017

**விராலிமலை வட்டத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு ரூ.4942200 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் வருவாய்த்துறையின் சார்பில் விராலிமலை வட்டத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை வட்டத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 42 பயனாளிகளுக்கு ரூ.504000 மதிப்பில் முதியோர் உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகைக்கான காசோலைகளும், 232 பயனாளிகளுக்கு ரூ.536200 மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளும், 67 பயனாளிகளுக்கு ரூ.837500 மதிப்பில் இயற்கை மரணம் உதவித்தொகைக்கான காசோலைகளும், 54 பயனாளிகளுக்கு ரூ.432000 மதிப்பில் ஆண் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், 23 பயனாளிகளுக்கு ரூ.230000 மதிப்பில் பெண் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 7 பயனாளிகளுக்கு ரூ.700000 மதிப்பில் விபத்து நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 9 பயனாளிகளுக்கு ரூ.140000 மதிப்பில் நலிந்தோர் நல உதவித்தொகைக்கான காசோலைகளும், 125 பயனாளிகளுக்கு ரூ.1562500 மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளும், 55 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளும் என மொத்தம் 614 பயனாளிகளுக்கு ரூ.4942200 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. விராலிமலை பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று விராலிமலையை இலுப்பூர் வட்டத்திலிருந்து பிரித்து தனித்தாலுகாவாக உருவாக்கப்பட்டுள்ளது. இதே போன்று புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலைய தொடங்கப்பட்டு செயல்பட்டு வருவதுடன் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு நடைப்பாதை, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, தார்சாலை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர்கள் திரு.சுப்பையா, திரு.ராஜேந்திரன், வட்டாட்சியர் திரு.சதீஷ், முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.குருமூர்த்தி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.கிருஷ்ணன், திரு.பெரியசாமி, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**